விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 யாழ்ப்பாணம் | ஆவணி 13 | ஷவ்வா 28 சனிக்கிழமை | இதழ் 196 29-8-1981

டில்கா
வாச் வேக்ஸ்
Dilka Watch Works
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.
டில்கா வாச் வேக்ஸ்
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 8174

தரத்தினில் சிறந்த
மான் - முயல் - வரிக்குதிரை
யானை - விளக்கு
சந்திரிக்கா - பூ
புலிமார்க் ஒடுகளையே
பாவியுங்கள்
மு.தா.பொன்னம்பலம்
36, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
போன்: 7493

★ அரசாங்கம் - தமிழர் விடுதலைக் கூட்டணி சந்திப்பு

# முக்கியவிஷயங்கள் இணக்கம்:

# திங்கட்கிழமை கூட்டறிக்கை?

(நமது அரசியல் நிருபர்)

அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே இரண்டு தடவைகள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில்; முக்கிய விஷயங்களில் இருசாராரும் இணக்கம் கண்டிருப்பதாகவும், சில பிரதான அரசியல் பிரச்னைகளுக்குச் சுமுகமான தீர்வுகாணப்பட்டிருப்பதாகவும் இப்பேச்சுவார்த்தைகளுடன் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை, அரசாங்கத்துக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இடையே நடைபெறும் மூன்றாவது சந்திப்பைத் தொடர்ந்து, அரசு-கூட்டணி கூட்டறிக்கை ஒன்றும் வெளியிடப்படலாமென்றும் இந்த வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

## இருதடவைகள் சந்தித்தனர்

அரசு—கூட்டணி சந்திப்பு முதல் தடவையாக இம்மாதம் 18ம் திகதி நடைபெற்றதும், இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரண்டாவது தடவையாக இருசாராரும், சந்தித்துக் கொண்டதும், பேச்சுவார்த்தைகள் சுமுகமான சூழ்நிலையில் இடம் பெற்றதும் தெரிந்ததே.

## அரசியல் பிரச்னைகள்

இப்பேச்சு வார்த்தைகளில் குறிப்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்பில் அரசியல் பிரச்னைகளே அதிகம் இடம்பெற்றதாக நம்பப்படுகிறது. இப் பிரச்னைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டு, ஆலோசிக்கப்பட்டதைத் தொடர்ந்து முக்கிய பிரச்னைகளில் இரு சாராருக்குமிடையே இணக்கம் காணப்பட்டதாக அறியப்படுகிறது.

நீண்ட காலமாக தமிழர்களை எதிர்நோக்கி வரும் முக்கிய விஷயங்களில் நீண்டநேர ஆலோசனையின் பின்னர் ஓரளவு இணக்கம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது.

## மாவட்ட அபிவிருத்தி சபை

தமிழ்ப்பகுதிகளில் உள்ள மாவட்ட அபிவிருத்தி சபைகளின் அதிகாரங்களைப் பரவலாக்கும் விஷயத்தில் இணக்கம் காணப்பட்டதாக அறியப்படுகிறது.

நிர்வாகத்தை பரவலாக்குவதில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் இப்பேச்சு வார்த்தைகளின் போது சுமுகமான முறையில் நீக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

## வேலைவாய்ப்பு, பல்கலைக்கழகம்

இவைதவிர, கல்வித்துறையில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள், பல்கலைக்கழக அனுமதி, வேலைவாய்ப்பு, போன்ற முக்கிய விஷயங்களிலும் ஏதொரு வகையில் 'விட்டுக் கொடுத்து' இருசாராருக்குமிடையே இணக்கம் காணப்பட்டதாவும் அறியப்படுகிறது.

## மீண்டும் சந்திப்பு

அரசு—கூட்டணி சந்திப்பு மீண்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை நடைபெறும். இதனைத் தொடர்ந்து ஏற்படும் முடிவுகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக்குழு கூடி ஆலோசனை நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு—கூட்டணி பேச்சுவார்த்தைகளில் காணப்பட்ட முடிவுகளுக்கு, கூட்டணியின் பாராளுமன்றக்குழுவும் அங்கிகாரம் வழங்கும் பட்சத்தில் திங்கட்கிழமை மாலை அரசு—கூட்டணி கூட்டறிக்கை வெளியிடப்படும் என்று நம்பகமாக அறியப்படுகிறது

## யாழ். - கொழும்பு ரயில்சேவை வழமையானது!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு ரயில்சேவை இன்று வழமைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பரந்தனுக்கும் பளைக்குமிடையே நேற்று முன்தினமிரவு சுமார் 8 மணியளவில் ரயில் பெட்டியொன்று தடம் புரண்டதில் ரயில் சேவை பாதிக்கப்பட்டது.

இதன் எதிரொலியாக நேற்று முன்தினமிரவு முதல் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட ரயில்கள் பளைமட்டுமே ஓடின. பளைக்கும் பரந்தனுக்குமிடையே பிரயாணிகள் பஸ் மூலம் இடமாற்றப்பட்டனர் ரயில பாதை நேற்று சீர்செய்யப்பட்டதைத் தொடர்ந்து இன்று முதல் ரயில் சேவை வழமையாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## கனகசுந்தரம் மரணம்: கொலை என்று தீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பலியான யாழ். பொலிஸ் சார்ஜண்ட் கந்தையா கனகசுந்தரத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின் பின்னர் நீதவான் கொலை என்று தீர்ப்பளித்துள்ளார்.

இவ்வருடம் மே மாதம் 31ம் திகதி நாச்சிமார் கோவிலடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது. இவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார். இதனைத் தொடர்ந்து மரணவிசாரணை நடைபெற்றது. (மா)

## படகு விபத்தில் பலியானவர்களுக்கு ரூ. 25 ஆயிரம் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

காரைநகர், தோப்புக்காடு படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து 25ஆயிரம் ரூபா கிடைக்கவிருக்கிறது.

செப்டம்பர் 4ம் திகதி இந் நிதியை யாழ். மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா வழங்குவார்.

தோப்புக்காடு கிராமத்தில் உள்ள 10 குடும்பத்தினர் படம் பார்க்கப் படகில் சென்ற போது, இப்படகு விபத்துக்குள்ளாகி 17 பேர் பலியானது தெரிந்ததே. ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். கணேஷ் தலைமையில் இந் நிதி வழங்கப்படவுள்ளது,

மேற்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். தர்மபாலன், சமூகசேவை உதவி அத்தியட்சகர் திரு ரி. செங்காதரன் ஆகியோர் மேற்கொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (மா)

## பொது போக்குவரத்துச் சேவைகளை யாழ். அபிவிருத்திசபை பொறுப்பேற்கும்?

(யாழ்ப்பாணம்)

''பொது போக்குவரத்துச் சேவைகளை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை பொறுப்பேற்க வேண்டும்'' என்ற தீர்மானம் யாழ் மாவட்ட அபிவிருத்திசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

சபை உறுப்பினர் திரு. க சின்னத்துரையால் கொண்டுவரப்பட்ட மேற்படி தீர்மானம் வாபஸ் பெறப்பட்டு உறுப்பினர் திரு நடேசு இராஜேந்திரனால் திருத்தத்துடன் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்தின் விபரம் வருமாறு.

''வடபிராந்திய போக்குவரத்துச்சபையை மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சபைகளுடன் (முல்லைத்தீவு, மன்னார், வவனியா) தனித்தும் ஒருமித்தும் எடுத்து நடாத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும்.''

இதற்கென மாவட்டசபைத் தலைவர் சு. நடராசா, பண்டிதர் கா. பொ. இரத்தினம் எம். பி, யாழ் மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, திரு. க, துரைரத்தினம் எம். பி, உறுப்பினர்கள் திரு ந இராசேந்திரன், திரு. க சின்னத்துரை ஆகியோரடங்கிய குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. (மா)

## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

## பனைமரங்கள் வெட்டத்தடை

(மன்னார்)

இலங்கை பனம்பொருள் அபிவிருத்தி சபையின் கோரிக்கையை அடுத்து மன்னார் மாவட்டத்தில் பனை மரங்கள் வெட்டப்படுவது தடை செய்யப்படும்

இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவில் மேற்கொள்ளவிருக்கிறது.

## தரமுயர்வு

(சாவகச்சேரி)

கல்வி மா அதிபதியின் சிபார்சின்பேரில் மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயம், மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

19-8-81

### மணிவாக்கு

சிந்தனை, சொல், செயல் இம்மூன்றும் அன்பை அடிப்படையாகக் கொண்டவையாக இருந்தால் வாழ்வு முழுமையானதாகவே இருக்கும்.

—சர்வோதய சிந்தனைகள்.

# நமது நோக்கு

## தாயும் மகனும்

மகட்பேற்றில் தாய் அடையும் மகிழ்ச்சி மிகப் பெரிது. இங்கிலாந்து என்ருலென்ன, இந்தியா வென்ருலென்ன, பௌத்ததர்மம் தழைக்கும் சிறிலங்காவென்ருலென்ன. இது இயற்கை அமைப்பு.

இந்த மகிழ்ச்சியை விட அதிக மகிழ்ச்சியை தாய் அடைவது எப்பொழுது?

தான் பெற்ற மகன் நல்ல பெயர் எடுத்தல்' என்பது முனிவரின் விடையாகும். எவ்வாறு ஒருவர் நல்ல பெயர் எடுக்கலாமென்பது அடுத்த கேள்வியாகும்.

கல்வி, ஒழுக்கம், பண்பாடு போன்ற நற்குணங்கள் கொண்ட ஒருவன் புகழுக்குரித்தானவன். மகனைப் பற்றிய புகழ்ச் சொல் தாயின் காதில் விழும் பொழுது உண்டாகும் இன்பத்தை வள்ளுவர் குறளில் குறிப்பிட்டிருப்பது தெரிந்ததே!

உலகின் மூன்று கேந்திர ஸ்தானங்களில் தாய்-மகன் தொடர்பை அரசியல் அரங்கின் உயர் மட்டத்தில் அவதானிப்போம்.

முதலாவது பிரிட்டிஷ் மகாராணி. எலிஸபெத்தும் அவருடைய மகன் பட்டத்துக்குரிய இளவரசர் சார்ல்ஸும்.

சிறு பொழுதிலேயே இளவரசர் சார்ல்ஸ் பிரிட்டிஷ் முடிக்குரியவரென்று பெரிதுவந்தார் எலிஸபெத் மகாராணி இன்று அவரை ஒத்தகுணமும் ஒத்தபண்பும் கொண்டசீமாட்டி ஒருவருக்கு திருமணஞ் செய்து கண்ட இன்பமும் தாய்க்கும், பெரிதாகும்.

ஆயினும் தன்மகன் பிரிட்டிஷ் இராச்சியத்தின் மன்னனாக காண்பதே வர்ணிக்கமுடியாத இன்பமாகும் அதுசர்ச்சைக்குரியதாய் விட்டது. தாய் முடி துறந்தால் அல்லது மறைந்தால் மகன் பட்டத்துக்கு வரலாம். முடிதுறப்பது, அல்லது இளைப்பாறுவது மரபல்ல. எனவே இந்த தனித்துவநிலைமை முனிவர் கூற்றுக்கு பொருந்தாது.

அரசியல் அதிகாரம் இந்த இயற்கை இன்பத்துக்கு ஒவ்வாத பண்டம். இளவரசர் சார்ல்ஸ் - டயனு சீமாட்டி கல்யாண கோலாகலம் பிரிட்டிஷ் அரசியல், பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைத் திசைதிருப்பு வந்த ஒருமாபெரும் தந்திரமாகவும் கருதப்படுகிறது

இரண்டாவது, இந்தியாவின் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கதை ஒரளவித்த வேறுபட்டது.

குடும்பவாழ்க்கையில் நினைத்த அளவிற்கு அநுகூலமில்லாத போதும், அவர் தகப்பனுக்குப் பின்னாலும் புகழ்படைத்த பிரதமராக மக்கள் ஆதரவைப் பெற்ற பலம்வாய்ந்த பெண்மணி, விமான இயக்குநராகிய மகன் ரஜிவ் காந்தி மக்கள் அன்பையும் மதிப்பையும் பெற்றிருக்கிறுரென்று உவகை கொள்வது இயற்கை.

ஆனுல் இந்திராவின் அரசியல வாழ்வுக்கு காலஞ்சென்ற மகன் சஞ்ஜே ஆற்றல்மிக்க ஆதரவாளராயிருந்தார். அந்தப் பேரிழப்புக்கு ஈடுசெய்ய முடியாத ரஜீவ் எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டது மக்களின் ஏகோபித்த கிளர்ச்சியால் என்பது உண்மை. நேரு குடும்ப மரபு இந்தியாவுக்கு தொடர்ந்து கிடைக்க வேண்வமென்ற விருப்பம் மக்கள் மத்தியில் உயிர்த் துடிப்புடன் செயற்படுகின்றது

இந்திரா இன்றைய அரசியல் கடின நிலையில் நிறைவேற்று அதிகார ஜனுதிபதியின் பிடியைப் பிடிக்கிருரென்றும் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளிலிருந்து திசைதிருப்பும் தந்திரத்தைக் கையாளும் பணியில் மகன் "ஆமா" சொல்லி தம்மாலியன்ற உதவியை நல்குவாரென்றும் கருதப்படுகிறது

மகன் சான்ருேனுக இருந்தபோதும் அவரைத் தனது பதவிக்கு ஆளாக்கும் நேரடி நோக்கு இந்திராவுக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

மூன்ருவது எங்கள் நாட்டில் தாய்--மகன் பிரச்னை நீதிமன்றத்துக்கு படியேறி விட்டது. இன்று நாட்டில் நிலவும் பல தொல்லைகளிலிருந்து மக்களை மயக்க வல்ல சுவையான சிறு நாடகம் இது.

திரு. அநுரா பண்டாரநாயக்க இரு பிரதமர்களின் புதல்வன்; இருந்தும் அந்தப் பதவியை அவர் உரிமையுடனே, அல்லது மக்கள் ஆதரவாலோ இன்று இலகுவாகப் பெறக்கூடியவரல்லர்.

முன்னைநாள் பிரதமராகிய அவருடைய தாயார் தன் கணவரின் அகால மரணத்தால் அப்பதவிக்கு வந்தவர்.

இன்றும் அவருக்கு நேர்ந்த அரசியல் தாழ்வு மக்கள் அனுதாபத்தைப் பெருக்கி மீண்டும் அவருக்கு அரசியல் தலைமையை வழங்க வல்லது

இதற்கு நேர்மாருன பிரிவினையே இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இடம் பெற்றிருக்கிறது. தமக்குப் பின் தமது மகன் அரியாசனம் ஏறுவதை சிறிமாவோ நிச்சயம் விரும்புவார்.

ஆனுல் இன்றைய நிலையில் தாயும் மகனுமென்ருலும் வாயும் வயிறும் வேறு என்ற வாசகத்துக்கமைய தம்முடைய அதிகாரத்தைத் துறக்க அவர்தயாரில்லை.

இந்த தாய் - மகன் தற்காலிக பிரிவினை நாடகம், அவர்களுக்குரித்தான மக்கள் ஆதரவைக்கெடுத்து விடுமென்று மனப்பால் குடிப்பது அரசியல் மடமை. எவ்விதத்திலும் தெய்வநியதி இருக்குமானுல் மீண்டும் தாய் ஆட்சி அமைக்க மகன் உதவலாமென்ற நிலை உருவாக முடியாததல்ல.

# செல்வச்சந்நிதியில் இன்று கொடியேற்றம்

புண்ணிய பூமியாகிய பரத கண்டத்திலே ஆறுபடைகளிலுமமர்ந்து அருள்பாலிக்கும் குமரப்பெருமான் சேய் நாடாகிய ஈழத் திருநாட்டின் மீது கொண்ட பெருங்கருணையினுலே விசேடமாக கதிர்காமம், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், உகந்தமலை ஆகிய ஆறுபடைகளிலும் மற்றும் இயற்கை அழகுமிகு புனித ஆலயங்களிலும் உவந்து நடமாடியருள் பாலிக்கிருன்.

ஈழமணி நாட்டின் ஆறுபடைகளில் ஒன்ருக விளங்கும் செல்வச்சந்நிதித் திருத்தலம் செந்தமிழும் சைவமும் செழிப்புற்ருேங்கும் யாழ். நகரின் வடகிழக்குத் திசையில் சலசலத்தோடும் தொண்டமாஞற்றங்கரையோரமாக அமைந்திருக்கிறது.

இவ்வாலயம் எழில்மிகு ஆலஞ்சோலைகளும் ஆடும் மயிலினங்களும் வெருண்டோடிடும் மான் கூட்டங்களும் நிறைந்து காணப்படும் இயற்கை எழிலுடன் சிறப்புற்று விளங்குகிறது. இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று விளங்குகிறது.

### பூர்வீக வரலாறு

சூரசம்மாரம் நடைபெற்ற காலத்தில் திருச்செந்தூரில் இருந்து ஸ்ரீ முருகப்பெருமான் தென்கேயுள்ள எம்கூடத்தை நோக்கி வந்துகொண்டிருக்கும் போது இத்தலத்திற்கு வந்ததாகவும் மாலை நேரமாகிய அந்நேரத்தில் இங்கே தங்கியிருக்க வீரவாகுதேவரும், தேவர்களும் மற்றும் போர் வீரர்களும் பெருமானைப் பூசித்து வணங்கினரெனவும் அவர்களின் வேண்டுதலுக்கிணங்க அவ்விடத்தமர்ந்து அடியார்களின் பாவங்களை நீக்கி, மெய்ஞ்ஞானத்தை உணர்த்தியருளினுரென்றும் கூறுவர்.

இறைவன் கடாட்சத்தினுலே இத்தலம் இன்று புனிதமும் மகிமையும் பெற்று அதிசிறப்புடன் விளங்குகிறது.

—வ. குமாரசாமி—

### சமாதி

வேலவனின் பெருங்கருணையினுலே ஈர்க்கப்பட்ட மகாமுனிவரொருவர் இத்தலத்திலே அமர்ந்து முருகப்பெருமானைப் பூசித்து அவனின் அதியற்புத நற்கருணையினுலே இத்தலத்திலேயே சமாதியாகி, எந்தை முருகனுடனும் இரண்டறக் கலந்துகொண்டார். அம்மகா யோகியின் சமாதித்தானத்திலே ஒரு பூவரச விருட்சம் தானுகவே தோன்றி வளர்ந்தது. எம்பெருமான் முருகனும் தனது திருவடியை அங்கே பதித்துத் திருநடனமாடி அற்புதம் பல புரிந்து நின்ருன். இத்தலம் தேவர்களும், முனிவர்களும் வந்து போற்றும் புனிதஸ்தலமாக விளங்குகிறது. மானிடர்மீதுகொண்ட பெருங்கருணையினுலே அவர்களுக்குத் தனது பெருங்கருணையைச் சொரிய விரும்பிய எம்பெருமான் ஒரு திருவிளையாடலை நிகழ்த்த பெருவிருப்புக்கொண்டான்.

### வள்ளிக்கொடி

ஆடிமாதப் பிரதமையில் அற்புதமான முறையிலேயே தரையின் நின்றும் வள்ளிக்கொடி யொன்று தானே அரும்பித் தோன்றும இத்தினமே இங்கு கொடியேற்ற விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்று தொடக்கம் விழா ஆரம்பமாகி ஆடிப்பூரணையில் நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் விழா நறைவெய்துறது. இங்குள்ள புனித தீர்த்தம் செல்வ புஷ்கரணி என்ற புனிதநாமம் பெற்று விளங்குகிறது. உற்சவ காலங்களில் ஆலயத்தின் எண்திசைகளிலுமிருந்து காவடிகள் வரும் காட்சியும் நிரைநிரையாகக் கற்பூரச் சட்டிகள் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சியாக அமையும்.

இப்பொழுது எம்பெருமான் குடிகொண்டிருக்கும் புனித ஆலயம் 1921 ஆம் ஆண்டு அடியார்களினுலே அமைக்கப்பட்டதாகும். இத்தலத்திற்குச் சென்று வணங்கும் அடியார்கள் கதிர்காறம் சென்று வணங்கும் அதே பலனைத் தவருக பெறுவர்.

# தீராதபிரச்னைகளுக்கும் தீர்வு பேச்சுவார்த்தையே!

(நேற்றைய தொடர்ச்சி)

எந்த அரசுடனும் சேரமாட்டோம் என்று கூறிவந்த தமிழ் அரசுக் கட்சி 1965-ம் ஆண்டில் டட்லியின் தேசிய அரசில் சேர்ந்தது; திரு. எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பதவியேற்ருர்.

திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தவர் திரு. ருெனி டி மெல். இருவரும் ஒருவரையொருவர் கடுமையாகத் தாக்கிய சம்பவங்களும் உண்டு.

இன்று ருெனி டிமெல் ஜே. ஆர். தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியில் நிதி அமைச்சர்.

இவ்வித மாறுதல்களுக்கெல்லாம் சந்திப்பு - சம்பாஷணை - பேச்சுவார்த்தை என்பனவே காரணம்.

1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1957-ம் ஆண்டில் இதை எதிர்த்துத் தமிழ் அரசுக்கட்சி பிரசித்திபெற்ற பாதயாத்திரையை நடத்தித்திருமலையில் மாநாடு கூட்டி அன்றைய பண்டாரநாயக்காவின் மக்கள் ஐக்கிய முன்னணி அரசுக்குக் காலக்கெடுவிதித்துத் தீர்மானம் நிறைவேற்றியது.

### பண்டா - செல்வா ஒப்பந்தம்

நிலைமை மோசமடையப் போகிறதென்பதை உணர்ந்த திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழரசுக் கட்சித் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்திஞர். இதன் முடிவில் செய்து கொண்ட ஒப்பந்தம் தான் பண்டா-செல்வா ஒப்பந்தம்.

எஸ். எம். ஜி.

பெரும் தேசிய நெருக்கடி தவிர்க்கப்பட்டது. ஆனுலும் அந்த ஒப்பந்தம் செயல்படாமல் கிழித்தெறியப்பட்டது.

1965-ம் ஆண்டிலும் நாட்டில் அமைதியையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு திரு. டட்லி சேனநாயக்கா முயற்சி செய்தார். அதன் பயனுக "டட்லி-செல்வா" ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதுவும் செயல்படவில்லை இன்று மீண்டும் கொந்தளிப்பான சூழ்நிலை தோன்றியுள்ளது.

பெரும் தேசிய நெருக்கடி தவிர்க்கப்பட்டது. ஆனுலும் அந்த ஒப்பந்தம் செயலபடாமல் கிழித்தெறியப்பட்டது.

1965ம் ஆண்டிலும் நாட்டில் அமைதியையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்கு திரு. டட்லி சேனநாயகா முயற்சி செய்தார். அதன்பயனுக "டட்லி--செல்வ" ஒப்பந்தம் ஏற்பட்டது.

இதுவும் செயல்படவில்லை. இன்று மீண்டும் கொந்தளிப்பான சூழ்நிலை தோன்றியுள்ளது.

இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கும் ஜனுதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனுவுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.

நெருக்கடி ஏற்பட பின்புதான் பேச்சுவார்த்தைகள் பற்றிச் சிந்திப்பது நமது நாட்டில் ஒரு வழக்கமாகிவிட்டது.

இப்பேச்சுவார்த்தைகளை ஆட்சிக்கு வந்ததுமே அரசாங்கம் ஆரம்பத்திருந்தால் இன்றைய நெருக்கடி தோன்றியிருக்காது என்று சொல்லலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டால் இதர அரசியல் கட்சிகள் அதை எதிர்க்கத் தயாராக மாட்டார

(6-ம் பக்கம் பார்க்க)

அஞ்சலகங்களுக்கு

# நேரில் சென்று குறைகளை விசாரிக்க வேண்டும்

[யாழ்ப்பாணம்]

"திருப்திகரமான தபால்-தந்தி சேவையை பொது மக்களுக்கு அளிப்பதற்காக காலனித்துவ நடைமுறையைப் பின்பற்ருது, அஞ்சலகங்களுக்கு நேரில் சென்று குறைகளையும் கஷ்டங்களையும் அவதானித்து விமோசனம் வழங்க வேண்டும்"

இலங்கை அஞ்சல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்க யாழ். கிளைக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது.


இக்கூட்டத்தில் கீழ்க்காணும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

"இரவில் தொலை பேசிப்பரிவர்த்தனை நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் தொலைபேசி இயக்குநர்களன் வேலைப்பளுவுகளை குறைப்பதற்கு மேலதிக உத்தியோகத்தர்களை நியமித்தல் வேண்டும்.

"சேவைநிபந்தனையில் மாற்றம் ஏற்படும் பொழுது விரும்பாத உத்தியோகத்தர்கள் முழு உரிமையுடன் இளைப்பாற அனுமதிக்க வேண்டும்."

மற்றும தகைனமக் கேற்ப பதவி உயர்வு சம்பள உயர்வு சம்பந்தப்பட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

[மா]




இன்று நல்லூர்க் கந்தன் தீர்த்தத் திருவிழா

நீர்க்குமிழிக்கு நிகரென்பர் யாக்கை நில்லாது செல்வம்
பார்க்குமிடந்தமின் போலு மென்பர் பசித்தவந்தே
ஏற்குமவர்க்கிடவென்னி னெங்கேனுமெழுந்திருப்பார்
வேற்குமரற்கன்பிலாதவர் ஞானம்மிக வுநன்றே

—கந்தர் அலங்காரம்

# அங்கோலாவுக்குள் கடும் சண்டை!

## தென்னுபிரிக்காமீது ஆபிரிக்க நாடுகள் சீற்றம்

லண்டன், ஆக 28 அங்கோலாவுக்குள் ஊடுருவல் புரிந்த தென்னுபிரிக்க படைகள் வாபஸ்வாங்குவதற்கு ஆயத்தம் செய்துகொண்டிருப்பதாக இங்கு கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறிய போதிலும் அங்கோலாவுக்குள் இருதரப்பினருக்கு மிடையில் கடும் சண்டை நடப்பதாகவே கருதப்படுகின்றது. நமீபியா வுக்கு 30 மைல் தொலைவில் இந்த ஊடுருவலை தென்னுபிரிக்க படைகள் மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டது.

அங்கோலாவின் எல்லையைக் கடந்து வெகு தூரம்வரை தாக்குதலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் தென்னுபிரிக்க படைகளின் விமானம் ஒன்றையும் ஹெலிகாப்டர் ஒன்றையும் அங்கோலா படைகள் சுட்டு விழ்த்தியுள்ளன.

இதேவேளை அங்கோலாவின் அவசரவேண்டுகோளை யடுத்து ஐ. நா. பாதுகாப்புச் சபையைக் கூட்டுவதுபற்றிய ஆலோசனைகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேசமயம் அங்கோலாவின் ஐ நா தூதுவர் பொதுச்செயலாளர் டாக்டர் வால்ட்ஹெயிமைச் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

இதற்கிடையில் ஐ நா பிரதிநிதிகளை நமீபியா எல்லையில் நடக்கும் சம்பவங்களை வந்து பார்க்கும்படி தென்னுபிரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

தென்னுபிரிக்கா அங்கோலாவிலிருந்து வெளியேறவேண்டும் என பிரிட்டன் கேட்டிருக்கின்றது.

இதேசமயம் கென்யா தான்சானியா போன்ற ஆபிரிக்க நாடுகள் பலவும் தென்னுபிரிக்காவின் ஊடுருவலைக் கடுமையாகக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளன.

தென்னுபிரிக்காவுக்கான சகல உதவிகளையும் நிறுத்திவிடுமாறு ஏனைய சகலநாடுகளையும் இந்த ஆபிரிக்க நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

### இப் பிரதேசங்களிலிருந்து

## வல்லரசு கெடுபிடி நீங்க வேண்டும்

### இந்திய அமைச்சரின் விருப்பம்

புதுடில்லி, ஆக 28 தென்ஆசியாவிலும் தென்கிழக்காசியாவிலுமிருந்து வல்லரசுகள் தம் கெடுபிடிகளை அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. நரசிம்ம ராவ் கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம்செய்துள்ள கம்பூச்சிய மக்கள் குடியரசின் வெளிநாட்டமைச்சருக்கு அளிக்கப்பட்ட விருந்தொன்றில் பேசுகையிலேயே திரு. நரசிம்மராவ் இக்கருத்தை வெளியிட்டார்.

இந்துசமுத்திரப் பிராந்தியம் அமைதிப்பிராந்தியமாக இருக்கவேண்டுமென இந்தியா விரும்புவதாகக் குறிப்பிட்ட திரு. ராவ் இப்பிரதேசத்திலிருந்து பெரும் வல்லரசுகள் தம் கெடுபிடி நடவடிக்கைகளை அப்புறப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

## 'கிராமங்களிடையே ஒற்றுமை வளர வேண்டும்'

[புலோலி]

மனிதன் சமூகத்தோடுஒன்றி வாழ்வதன் மூலமே மனிதத்தின்பூரணத்துவத்தை அடைய முடியும். சமூகத்தினின்றும் விலகி வாழ்ந்து மனிதன் தனது தேவைகளை ஒருபோதும் பூர்த்திசெய்ய முடியாது.

மேற்கண்டவாறு வல்வெட்டித்துறை உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பேராசிரியர் கலாநிதி கா. இந்திரபாலா குறிப்பிட்டார்.

வல்வெட்டித்துறை உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் திரு. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிலே தொடர்ந்து உரையாற்றிய கலாநிதி இந்திரபாலா குறிப்பிட்டதாவது: மனிதன் சமூகத்தோடு இணைந்து ஒன்றி வாழ்வதன் மூலம்தான் மனித சமுதாயம் தனது தேவைகளைச்சிறப்பாகப் பூர்த்தியடையச்செய்து மேம்பாடடைய முடியும். விளையாட்டுக்கள் மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணம், ஒற்றுமை அன்பு என்பனவற்றை ஏற்படுத்துகின்றன. இதனால் மனிதனுக்கும் சமூகத்திற்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுகின்றது.

வளம்மிக்க சமுதாய அமைப்பை ஏற்படுத்திக்கொள்வதற்கு எம்மால் இயன்ற ஒத்துழைப்பையும் பங்களிப்பையும் நாம் வழங்கவேண்டும். கிராமிய மக்களிடையே ஒற்றுமை பலப்படுத்தப்படவேண்டும். ஒற்றுமையின் மூலமே கிராமத்துறையின் அபிவிருத்திகளை மேற்கொள்ளமுடியும் மூலமாக இளைஞர்கள் இதனைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும். (க)

## பீகாரில் வெள்ளக் கொடுமை

புதுடில்லி, ஆக 28 பீகார் மாநிலத்தில் வெள்ள நிலைமை மிக மோசமாக இருப்பதாகத் தகவல்கள் கூறுகின்றன. கங்கைநதி சீற்றமுற்றிருப்பதால் பல இடங்களில் வெள்ளம் பெருகிப் பாய்கிறது. உத்தரபிரதேசத்தில் 2000 குடும்பங்கள் ஏற்கனவே நிர்க்கதிக்குள்ளாயினர்.

## பாதுகாப்பு கூட்டு ஒப்பந்தம்

டிரிப்போலி ஆக 28 லிபிய அதிபர் கேணல் கடாபி சிரியா, குவைத், தென் யேமன் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் ஆலோசனைகள் நடத்திவிட்டு நாடுதிரும்பியுள்ளார்.

அண்மையில் மத்தியதரைக் கடலில் வைத்து லிபியா விமானங்கள் இரண்டை அமெரிக்கப் போர்க்கப்பல்கள் சுட்டு வீழ்த்தியதை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்தே இத் தலைவர்களுடன் கேணல் கடாபி பேச்சுவார்த்தைகள் நடத்திவிட்டுத் திரும்பியுள்ளார்.

பாதுகாப்பின் நிமித்தம் இந் நாடுகளுக்கிடையில் கூட்டு ஒப்பந்தம் ஒன்று உருவாகியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

### கல்முனை கல்வி அலுவலகம்

## மட்டக்களப்பிலிருந்து அம்பாறைக்கு மாற்றம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளரின் நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்த கல்முனை பிரதம கல்வி அதிகாரி அலுவலகம் அம்பாறை மாவட்ட கல்விப்பணிப்பாளரின் கீழ் தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது.

சுமார் இருநூறுக்கு மேற்பட்ட பாடசாலைகளையும் 1500க்கு மேற்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட கல்முனை பிரதம கல்வி அதிகாரி காரியாலயம் தரமுயர்த்தப்பட வேண்டுமென்று இப்பகுதி அரசியல் வாதிகள் குரல் எழுப்பி வருகின்ற காலகட்டத்தில் பிரதம கல்வி அதிகாரியின் அதிகாரங்கள் சிலவும் அம்பாறை பணிப்பாளரின் கீழ் கொண்டுவரப்படுவது வேதனைக்குரியதாக தெரிவித்த ஆசிரிய வட்டாரங்கள் அம்பாறை கல்வி இலாகாவில் தமிழ் ஊழியர்கள் பற்றாக்குறையினால் சிரமம் ஏற்படலாம் எனவும் தெரிவித்தனர். (க)

### மட்டுநகர் பாடசாலைகளுக்கு

## 'பாண்ட்' வாத்திய கருவிகள் வாங்க லட்சரூபா ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு பாண்ட் வாத்திய கருவிகள் வாங்குவதற்கு ஒரு லட்சம் ரூபாயும் விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக ரூபாய் 50,000யும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

பாண்ட் வாத்தியக் கருவிகள் வாங்குவதற்கான நிதி மெதடிஸ்த மத்திய கல்லூரி, வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை, புனித மிக்கேல் கல்லூரி புனித சிசிலியா மகளிர் உயர்தர பாடசாலை என்பனவற்றிற்கு தலா 25 ஆயிரம் ரூபாய் என்ற ரீதியில் பகிர்ந்தளிக்கப்படும். விளையாட்டு உபகரணங்கள் தொகுதியிலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு வழங்கப்படும்.

மேற்படி நிதி வழங்கும் வைபவம் அடுத்த மாத நடுப்பகுதியில் இடம்பெறும். இதற்கான ஏற்பாடுகள் மட்டக்களப்பு கல்வித்திணைக்களத்தினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## 123 சாறிகளுடன் இளம்பெண் கைது!

((மன்னார்)

பெருந்தொகையான இந்தியச் சாறிகளுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த இளம் பெண் ஒருவரை தலைமன்னார் பொலிசார் கைது செய்து சுங்க அதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

13 பேர் கொண்ட கோஷ்டியாக தான் இந்தியாவுக்கு இப்பெண் சென்று வந்ததாகவும் 123 சாரிகளுடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த போது பொலிசார் இவரைக் கைது செய்தனர் எனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சுங்க அதிகாரி, ஜனாப் யு. கே. இஸ்மாயில் விசாரணை அடுத்து சுங்க அனுமதி இல்லாமல் காணப்பட்ட 45 சாறிகளை சப் கலெக்டர் திரு. எஸ். விசரத்தினம் பறிமுதல் செய்தார். (க)

## வேலைகள் பூர்த்தி

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற புகையிரத நிலையத்தின் வேலைகள் யாவும் தற்போது பூர்த்தி அடையும் நிலையிலுள்ளது. [க]





மீண்டும் வந்துள்ளது

மாணவ நண்பன்

Pilot BALL POINT

பைலட் மத்தியதர போல் பாயின்ட்



சிறப்பான எழுத்திற்கு உகந்த பைலட்

எங்கும் பெற்றுக்கொள்ளலாம்

ரூ. 1/80

விற்பனையாளர். ஷோ வொலஸ் அன்ட் ஹெஜஸ் கொழும்பு 3. டெலிபோன்:- 20671 - 9

SCI COMMUNICATION:



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானால் எழுதப்பட்ட கந்தபுராண வசனம் என்னும் நூலின் புதிய பதிப்பின் வெளியீட்டுவிழா நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் திருக்கார்த்திகைத் திருநாளன்று நடந்த பொழுது அரஸ்கோ அதிபர்' இலக்கநூலர்' இ. அரசரத்தினம், நாவலர் சபைபொதுச் செயலாளரும் விரதத்வருமான திரு.ம. ஸ்ரீகாந்தாவிடமிருந்துமுதற் பிரதியைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

# 'சமூக ஈடேற்றத்திற்த நடக்கும் சமுதாய பணிகள்'

[புலோலி]

''மனித சமூகத்தை ஈடேற்றுவதை நோக்கமாகக் கொண்டு மெதடிஸ்த திருச்சபை பல்வேறுவகையான சமூதாயப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றது. மக்கள் இத் திருச்சபையின் பணிகள்மூலம் நன்மைகளைப் பெற்று ஈடேற்றம் பெறவேண்டும்''

இவ்வாறு அகில இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் உப- தலைவர் திரு. ரி. இராஜசிங்கம் கரவெட்டி இடைக்குறிச்சியில் மெதடிஸ்த திருச்சபையின் இலவச பாலர்பாடசாலையைத் திறந்துவைத்து உரையாற்றுகையில் சொன்னார். இத்திறப்புவிழாவுக்கு திரு. எஸ். சிவப்பிரகாசம் தலைமைவகித்தார். உப தலைவர் திரு. இராஜசிங்கம் தொடர்ந்து சொன்னதாவது:

திருச்சபை இப்பகுதி மக்களுக்கு ஆற்றிவரும் சேவைகளைக் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். சமுதாயப்பணியின் அடிப்படையில் நடாத்தப்படும் இலவசக்கல்வி வகுப்புகள், தையல் நிலையம், பாலர் பாடசாலை என்பவற்றை வளர்த்து இச்சபை மேன்மேலும் மக்களுக்கு உதவிபுரிய வேண்டும். இப்பணிகளை மேலும் ஊக்குவிப்பதில் பொதுமக்கள் தமது ஆலோசனைகளையும், உதவிகளையும் அளிக்க வேண்டும்.

பருத்தித்துறை— கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை முகாமைக்குரு அருட்திரு கிங்ஸ்லி முத்தையா, குடும்பத்திட்டச் சங்கச் செயலாளர் திரு. பூவேந்திரன், திரு. எஸ். மாணிக்கம். திரு கே. பழனி உட்பட பலர்உரையாற்றினர்.


ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
லக்சரி பஸ் சேவை
யாழ்ப்பாணம் — கொழும்பு
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
பதிவு செய்வதற்கும் டிக்கட்டுகளுக்கும்:
ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: 83 0.
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்,
தொலைபேசி: இல: 7596.
புறப்படுதல் விபரங்கள்:
இடம்: கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்
நேரம் மாலை 7 - 45 மணி
யாழ்ப்பாணப்பாணத்திலிருந்து புறப்படுதல்:
செவ்வாய், வியாழன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்


## இன்று

[யாழ்ப்பாணம்]

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இன்று இரவு 8மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

செப்டம்பர் 13ம் திகதி தேரும். 14ம் திகதி தீர்த்தமும் நடைபெறும்

காலை திருவிழாக்கள் 7 மணிக்கும், மாலை திருவிழாக்கள் இரவு 7மணிக்கும் முடிவடையும்.

வழமைபோல் சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்துச் சேவைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இரவு கதாப்பிரசங்கம், பஜனை போன்ற நிகழ்ச்சிகளும் இடம் பெறவிருக்கின்றன. [மா]

## மூத்தவிநாயகர் சங்காபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நல்லூர் ஸ்ரீ மூத்த விநாயகர் ஆலய மண்டல பூர்த்தி நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கிறது.

அன்று இரவு இந்தியாவில் இருந்து வந்த பந்தநல்லூர் ரி. ஆர். தெக்ஷணாமூர்த்தி குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம்பெறும். [மா]

## இலங்கைத் தூதரகத்தில் தீ

பொன், ஆக. 28

மேற்கு ஜெர்மனியின் தலைநகர் பொன்னிலுள்ள இலங்கைத் தூதரகத்திற்கு தீ வைக்கப்பட்டதால் தூதரகத்தின் நுழைவாயில் எரிந்து சேதமடைந்துள்ளது.

எண்ணெ ஊற்றப்பட்டே தீ வைக்கப்பட்டதாக இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது இனந்தெரியாத சில நபர்கள் இத்தீவைப்புச் சம்பவத்தில் ஈடுபட்டனர் என்று சொல்லப்படுகிறது. கடந்த வாரம் இச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில் பாரிஸில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் வெளிச்சுவர்களில் இலங்கைக்கு விரோதமான சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. தூதரகத்திற்கு விசேஷ பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. [க]

## பேச்சு போட்டியில் முதலிடம்

[புலோலி]

யாழ். கல்வித் திணைக்களம் லயன்ஸ் கழகம் வை. எம். சி. ஏ. ஆகியன இணைந்து யாழ் மாவட்டப் பெண்கள் பாடசாலைகளுக்கிடையே நடாத்திய ஆங்கில பேச்சுப்போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக் கல்லூரி மாணவிகளான செல்விகள் ஜோய் தேவகடாட்சம், நித்தியகலா சின்னத்துரை ஆகியோர் முறையே 1ம், 2ம் இடங்களைப்பெற்றுக் கொண்டனர்.

## தீராத பிரச்னை ---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வென்று சொல்லமுடியாது.

கடந்தகால சம்பவங்களை உதாரணமாகக் கொண்டு இனிமேலும் தமிழர் பிரச்னைகள் சம்பந்தமாக அரசு பேச்சுவார்த்தை நடத்துவதானல் முதலில் கூட்டணி தவிர்ந்த ஏனைய கட்சிகளுடனும் இது பற்றிப் பேசி அவர்களுடைய ஆதரவும் பெற்ற பின்னர் கூட்டணியினருடன் பேச்சுவார்த்தை நடத்துவதே விவேகமாகத் தோன்றுகிறது.

## இப்படியும் நடக்கிறது

இருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

ஒருவர்: பஸ் போக்குவரத்துச் சேவைக்கும் விறகுகாலைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை நீங்கள் மறுக்கின்றீர்களா?

மற்றவர்: ப்பூ... இது என்ன கதை! பஸ் போக்குவரத்துச்சேவை, குறிப்பிட்ட சில இடங்களில் விறகுகாலைகளையும் ஆரம்பித்து 'விறகுச்சேவை' நடத்துவதாகப் பேசிக்கொள்கின்றார்களே... ... இதனை நீங்கள் மறுக்கின்றீர்களா?

இச்சம்பாஷணை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்குச் சமர்ப்பணம்!

ஃ ஃ ஃ

— ஊடுருவி

# நல்லை முருகன் தீர்த்தம் காண்போம்!

சித்திரை பிறந்துவிட்டால் எங்கும் திருவிழாக்கள்! கொண்டாட்டங்கள்! எங்கும் குதூகலம். காலபோக அறுவடையைப் பெற்ற மக்கள, அறுவடையின் ஒரு பகுதி வருமானத்தையாவது இயற்கையைப் படைத்த இறைவனுக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்ற அவாவில் இறைவனின் இல்லங்களான கோவில்களில் விழா எடுக்க விழைந்தனர் இன்று விழாக்களின் நோக்கங்கள் பல வாறுபட்டபோதிலும் விழாக்கள் மேலும் அதிகரித்துக் கொண்டேயுள்ளன எனலாம். இது எமது ஆன்மீக வளர்ச்சியைக் காட்டுவதாகும்.

பண்டைக் காலத்திலே பிற நாட்டு இளவரசியான மாருதப் புரவீகவல்லி குதிரை முகத்தோடு ஈழம் வந்தாளென்றும அவளது குதிரை முகம் குமரனைத் தொழ மாறியதால் மாவிட்டபுரமெனும் மாருப் புகழ் கொண்டதெனும் வரலாற்றுக் கீர்த்தி வாய்ந்த மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் உற்சவம் ஆரம்பித்து தீர்த்தோற்சவம் கடந்த ஆடி அமாவாசையன்று நடந்து முடிந்தது.

மந்தியினம் பழம் பறித்து கொஞ்சி விளையாட, மானினங்கள் மருட்சியுடன் அஞ்சி நடமாட, விஞ்சு புகழ் ஏழுமலை தஞ்சமென வாழும் வஞ்சிக்குறமகள் - வஞ்சி மணாளன் கதிரமலை மருவிடபாயும் மாணிக்க கங்கையிலே சிலநாட்களின் முன் தீர்த்தமாடித் தன் அடியவர்களுக்கெல்லாம் அருள் பாலித்தார்.

### நல்லூரிலே உற்சவம்

இந்தத் திருத்தலங்களிலெல்லாம் தன் திருவிழாக் கோலத்தைமுடித்துக்கொண்ட குமரனுக்கு நல்லைப்பதியிலே உற்சவம் ஆரம்பித்து 25 தினங்கள் திருவிழா நடைபெற்று முடிவடைகிறது. இன்று தீர்த்தோற்சவமும் நாளை பூங்காவனத்திருவிழாவும் நடைபெறும்.

இன்று நாம் வணங்குகின்ற நல்லூர் ஆலயமானது 1734ம் ஆண்டளவில் அமைந்ததாகும். இவ்வாலயத்தை ஸ்தாபித்தவர் இன்று இக்கோவிலைப்பரிபாலித்து சேவைப் பணியாற்றிவரும் கோவில் தர்மகர்தாவின் முன்னோரான இரகுநாத மாப்பாண முதலியார்.

1734ம் ஆண்டளவில் மிகச் சிறிதாக ஸ்தாபிக்கபட்ட இவ்வாலயத்தை இரகுநாத மாப்பாண முதலியார் காலத்திற்குக் காலம் பெரிதாகக் கட்டுவித்தார். இற்றைக்கு 245 ஆண்டுகளுக்குமுன் தாபிக்கப்பட்ட இவ்வாலயம் இன்று ராஜகோபுரம், மணிமண்டபம், வசந்தமண்டபம், ஐந்துக்குமேற்பட்ட பணிக்கோபுரங்களைக் கொண்ட கலைக் கோயிலாகக் கருணை பெருக்கெடுக்கும் கந்தகோட்டமாக விளங்கின்றது. அழகும் அருளும் பொருந்தப்பெற்ற நல்லைப்பதியைக்காணும் பேறானவ ஒவ்வொரு சைவமகனும் தமிழ்மகனும் கொண்டிருந்தான் என்பது

தனந்தா வழகு சடகந்தா
உலக சகல கலை
வினந்தா வெனவுன்னை
வேண்டுகிறேன் இருதான்
மறவா
மனந்தா நல்லூருக்குவரும்
வரந்தாவெனறு வாழ்த்து
கிறேன்.

'வனந்தாவிய புன வள்ளிக்கு வாய்த்தருள் மாணிக்கமே.

என்னும் பாடல் மூலம் தெளிவாகும்.

- ரவி


# மரண அறிவித்தல்

## தாமோதரம்பிள்ளை தனிநாயகம்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மன்னார் நாகத்தாழ்வில வசித்தவரும், நாகம்மாவின் அன்புக் கணவரும், உயிலங்குளம் முன்னைநாள் கிராமசபைத் தலைவரும், மன்னார் சாராய மதுசாலை உரிமையாளரும், பிரபல அரசாங்க ஒப்பந்தகாரருமாகிய திரு தாமோதரம்பிள்ளை தனிநாயகம் அவர்கள் 28-8-81-ல் காலமானார். இவர் தாமோதரபிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வரும், தனலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசிங்கம், சண்முகராசா ஆகியோரின் அன்பு மாமனும், கனகரட்ணம், வயித்திலிங்கம், காலஞ்சென்ற பொன்னம்பலம், அன்னட்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, கோபால் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 30-8-81 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு முள்ளிப்பள்ளம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

0774


இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 803ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஷூ மீ ஆகஸ்ட் 29-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடபபட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.